# புத்தம் வீடு நாவலில் கிறித்துவ அடையாளம்

**முனைவர் ஆ.முருகேசன்,**
**எம்.ஏ(த)., எம்.ஏ(ச)., எம்.ஏ(அ)., எம்ஃபில்., பி.எச்.டி,**
**உதவிப்பேராசிரியர் மற்றும் தலைவர்,**
**தமிழியல் உயராய்வுத்துறை,**
**அரசு கலைக் கல்லூரி,**
**உதகமண்டலம்**-643002.

## முன்னுரை

கிறித்தவர்கள் உரைநடை வளர்ச்சிக்குத் துணைபுரிந்ததோடு , உரைநடையில் இலக்கியங்கள் தோன்றவும் வழி வகுத்தனர் . கதை இலக்கியங்களில் புராண மாந்தர்களும் மன்னர்களும் கதைத்தலைவர்களாகப் படைக்கப்பட்டதிலிருந்து நடப்பியல் சார்ந்தும் கதைகளைக் கொடுத்ததில் கிறித்துவ நாவல்கள் பங்களிப்புச் செய்தன . இவ்வகையில் புத்தம் வீடு நாவலில் கிறித்துவ நெறிமுறைகள் மற்றும் அடையாளங்கள் சுட்டப்படும் தன்மை இங்கு முதன்மைப்படுத்தப்படுகிறது.

## கிறித்தவ சமயம்

கிறித்தவம் இன்று உலகில் பெரும்பாலான மக்கள் பின்பற்றும் மதமாக இருக்கின்றது. கிறித்தவத்திற்கு முன்னும் கிறித்தவத்திற்கும் அடிப்படையாக இருப்பது யூத மதமாகும். யூதர்கள் மத்தியில் பிறந்தவர் இயேசு கிறிஸ்து ஆவார் . இவரைப் பின்பற்றி இவரின் போதனைகளைப் பின்பற்றி, இயேசு தங்களை மீட்க வந்த மீட்பராக கிறித்துவர்கள் கருதுகின்றனர். கிறித்துவ கடவுளின் மகன் என்று விவிலியமானது கூறுகின்றது. அதையே கிறித்துவர்கள் பின்பற்றுகின்றனர்.

இயேசு கிறிஸ்து யூத சமுதாயத்தில் பிறந்தவர். முப்பது வருடங்கள் தன் தாய் தந்தையுடன் இருந்து தன் கடமைகளை செய்தார் . பின்னர் மூன்று வருடங்கள் மக்களுக்கான சேவை செய்தார் பல அற்புதங்களைப் புரிந்து தனது போதனைகளையும் முன்வைத்தார். ஏழைகளுடன் ஏழைகளாக வாழ்ந்தார் . பொய்யான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு சிலுவையில் அறைப்படுகின்றார். மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து விண்ணுலகத்திற்கு சென்றுவிட்டதாக விவிலியம் கூறுகின்றது. **இவ்வாறு அவர்களோடு பேசிய பின்பு ஆண்டவர் இயேசு விண்ணேற்றமடைந்து கடவுளின் வலப்புறம் அமர்ந்தார் . அவர்கள் புறப்பட்டுச் சென்று எங்கும் நற்செய்தியைப் பறைசாற்றினார்**(மாற்கு19, 20 திருவிவிலியம் -புதிய ஏற்பாடு) பின் அவருடைய சீடர்கள் அவர் போதனையை உலகம் முழுவதும் எடுத்து கூறுகின்றனர். இவ்வாறு கிறித்தவம் உலகம் முழுவதும் பரவுகின்றது

## இந்தியாவில் கிறித்துவம்

இயேசுவின் சீடர்கள் உலகம் முழுவதும் நற்செய்திப் பரப்பி இயேசுவை பற்றி அறிவிக்கின்றனர். அது போலவே இயேசுவின் சீடர்களுள் ஒருவரான தோமா இந்தியாவிற்குக் கடல் வழியாகவே வருகிறார்பல்வேறு போராட்டங்கள் பிரச்சினைகள் மத்தியில் போதனை செய்தார். கிறித்தவம் முழுமையாக இந்தியாவில் காலூன்றியது ஆங்கிலேயர் இந்தியாவைக் கைப்பற்றிய போதுதான் என்பர் . வாஸ்கோடகாமா வாணிபம் செய்ய இந்தியா வருகின்றார் . தோய்வு பெற்ற கிறித்துவம் அதிகமாக பரவுகின்றது. பதினைந்தாம் நூற்றாண்டில் சவேரியர் என்றிக்கே என்றீக்சு, இராபர்ட் தெ நோபிலி, எப்ரேம் தெ நேவர் , அருளானந்தர், வீரமாமுனிவர் போன்றோர் நற்செய்தி அறிவித்தனர்.

## கிறித்தவ சமயம்

கிறித்துவ அடையாளம் என்பதைப் பார்க்கும் முன்னர் கிறித்துவ அடிப்படையை உணர்ந்துகொள்ளும் முன்னோட்டத்தை அறிந்து கொள்வது பயனளிக்கக் கூடியதாகும்

## கிறித்தவத்தின் அடிப்படை

கிறித்தவம், தனக்கென்று திருமறைகளைக் கொண்டிருப்பினும், அது திருமறை சார்ந்த சமயம் அல்ல.மீட்பையும், தூய்மைப்படுத்தலையும் குறித்த வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளைக் கொண்டிருப்பினும் அது உயரிய மெய்யியல் கோட்பாடுகளையுடைய சமயமல்ல. இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டதே கிறித்துவ சமயமாகும் . மீட்பரும், ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் மானிடர் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படும் கடவுளின் அருளுக்குப் பதிலாகக் காட்டும் இறைநம்பிக்கை உறவின் அடிப்படையில் வாழும் வாழ்வாகும்

இயேசு மானிடரின் பாவங்களையும், சாபங்களையும் தாம் ஏற்று, சிலுவையில் ஓர் அடிமையைப் போன்று உயிர் துறந்தார் . இறைவனின் வல்லமையாலும் , மாட்சியாலும் நம்மை கடவுளுடன் ஒப்புரவாக்கி , நம் குற்றங்களை மன்னித்து , இறைவனின் பிள்ளைகளாக்கி , இறையரசின் குடிமக்களாக வாழவும் , உழைக்கவும் வழிவகுத்து, கடவுளின் அனைத்து ஆசிகளுக்கும் உரிமையுடையவராக்கி (எபே.1:) நல்வாழ்வைப் பெறவும், அதை நிறைவாகப் பெறுவதற்கும் (யோவான் 10:10) இயேசு வந்ததால் அவர் ஆண்டவர் என அழைக்கப்படும் தகுதியுடையவரானார்

இயேசு கிறிஸ்துவுடன் உள்ள உறவு , அவரின் மீதுள்ள நம்பிக்கையும் , அவர் நமக்குச் செய்த அனைத்தையும் அறிக்கையிடுவதாகும்: வார்த்தைகளால் மட்டுமல்ல, நம் செயல்களினால், வாழும் வாழ்க்கையினால் அறிக்கை செய்ய வேண்டும் . இங்கு கூறப்பட்டுள்ள ஒன்பது அடிப்படைக் கோட்பாடுகளும் குற்ற அறிக்கை ஒழுங்கு முறையாகும். அவை இயேசு கிறிஸ்துவின் மீது , அவர் ஆற்றிய பணிகளின் மீது நமக்கிருக்கும் நம்பிக்கையைச் சுட்டிக் காட்டுகின்றன . அவை திரும்பத் திரும்பச் சொல்லப்படும் வெற்றுக் கோட்பாடுகளல்ல , அவை தனிநபராகவும் , குழுவாகவும் தியானிக்க வேண்டிய, ஆழ்ந்த பற்றுதலோடும், எதிர்பார்ப்போடும் செயல்படுத்தப்பட வேண்டிய கோட்பாடுகளாகும்.

இவ்வாறாக இயேசு கிறிஸ்துவுடன் ஒரு தனி நபருக்கு இருக்கும் உறவுஇயேசு மீது அவர் கொண்டுள்ள நம்பிக்கையும் வாழ்க்கையையே மாற்றும் தன்மையுடையது, நம் நம்பிக்கையின் கட்டளை விதியாகவும் செயல்படுபவை . எனவே இது ஒரு இறைப்பற்றாளர் எதை ஏற்க வேண்டும் , எதை மறுக்கவேண்டும் என்பதை அறிந்து கொள்ள இந்த விசுவாச அறிக்கை உதவுகிறது . இறை வழிபாட்டிலும் தனி நபர் பிரார்த்தனையிலும் திரும்பத் திரும்பச் சொல்லப்படும் இக்கோட்பாடுகள் இயேசு கிறிஸ்திவின் மீதுள்ள நம்பிக்கை வளர உதவுகின்றன.

இறை நம்பிக்கையில் மென்மேலும் வளரவும்பொய்யான கோட்பாடுகளிலிருந்து வன்மைக் கோட்பாடுகளைப் பிரித்தறியவும் உதவி செய்யவே , முக்கியமான திருச்சபைகள் அனைத்தும் இவ்விசுவாச அறிக்கையைக் கூட்டமாகச் சொல்லுகின்றன துரதிருஸ்டவசமாக, இக்கோட்பாடுகள் மிக்க சிறப்பு வாய்ந்தவையாகவும் , முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும் இருப்பினும் , ஒரு நடைமுறைச் சடங்காக மாறிவிட்டன.

## கிறித்துவத்தின் கோட்பாடுகள்

1.விவிலியம் அல்லது திருமறை கடவுளின் வார்த்தையாகும்

2.இயேசு கிறிஸ்து இறைவனின் ஒரே மைந்தன். கடவுள் இயேசு கிறிஸ்து மூலம் மானிடராக அவதரித்தார் அவருக்கு இறைத் தன்மையும் மானிடத் தன்மையும் உண்டு

3.மெசியாவான இயேசு கிறிஸ்து, சாதாரண மானிடர் உருவாக்கியது போலன்றி, தூய ஆவியானவரால் கன்னி மரியாவின் மைந்தனாகப் பிறந்தார் எனவே இயேசு நம்மைப் போன்ற மனிதராக இருந்தும் அவர் பாவமற்றவர் . அவர் முதற்பெற்றோரின் குற்றத்தாலும், மானிட இனத்தின் குற்றத்தாலும் எவ்வகையிலும் பாதிக்கப்படாதவர்

4.கடவுள் தம் உருவிலும் தம் சாயலிலும் மானிடரைப் படைத்தார். கடவுள் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத , மனிதன் உயிர் உள்ளவன் ஆனான் (ஆதி.2:7)

5.மானிடர் குற்றம் செய்தனர் . கடவுளுக்குக் கீழ்ப்படியவில்லை . குற்றம் ஆவியின் மரணத்திற்குக் காரணமானது. எனவே கடவுளின் அருளால் மறுபடியும் பிறக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. குற்றம் கடவுளுக்கு எதிரான கலகமாகும் . குற்றத்தின் மூலம் நாம் கடவுளின் பகைவராகிறோம்.

6.கடவுள் எனக்காக , என் இடத்தில் உயிர் துறந்தவர் . முதல் பெற்றோரில் நாம் அனைவருமே குற்றம் புரிந்து , கடவுளின் ஆசிகளைத் துறந்தோம் . கடவுள் முதல் பெற்றோரின் மூலம் நம்மை அவரின் உரிமைப் பேறுக்கு (வாரிசுகள்) உரியவராக்கினார். கடவுளுடன் உள்ள உறவைப் புதுப்பிக்கவும் , கடவுளின் பிள்ளைகளாக இயேசு நமக்ககாச் சிலுவையில் உயிர் துறந்தார். குற்றமற்றவர் குற்றவாளிக்காக மரித்தார் கடவுளின் மைந்தன் கடவுளின் பகிவராக மாறின மானிட இனத்தைக் காக்க உயிர் துறந்தார் . இயேசு நம் குற்றங்கள் , சாபங்களனைத்தும் சிலுவையில் சுமந்து, நம்மை விடுவித்தார். மானிடர் தம் மீட்பிற்காக ஏதும் செய்ய இயலாத போது , இயேசு நமக்காகக் குற்றத்தையும் , சாபத்தையும் ஏற்றுக் கொண்டார் . கடவுளின் அருள் , அன்பு, இரக்கம் நீதி இவை அனைத்துமே கிறிஸ்துவின் சிலுவையில் வெளிப்பட்டது

7.இயேசு தான் முன்னறிவித்தபடி சிலுவையில் உயிர்துறந்து மூன்றாம் நாள்

உயிர் பெற்று எழுந்தார். அவர் புதிய , அழியாத உடலோடு மரித்தோரிலிருந்து உயிர் பெற்று எழுந்தார். அவர் உயிரோடெழுந்தது தந்தையாகிய கடவுள் ஆமென் என்று கூறியதைப் போன்று கிறிஸ்து சிலுவையில் எல்லாம் முடிந்தது என்று கூறியதைப் போன்று இருந்தது ஏனெனில் கிறிஸ்து தம் உயிர்தெழுதலில் நம் மீட்பை நிறைவேற்றினார் (கொரி.15)

8.இயேசு விண்ணேற்றமடைந்தார் . அவ்வாறே அவர் மீண்டும் வருவார் . உயிரோடிருப்போரையும், இறந்தோரையும் நியாயந்தீர்க்க, அவர் வாக்குறுதி கொடுத்தபடி திரும்ப வருவார்.(அப்.11)

9.இறந்தோர் அனைவரும் கடவுளால் உயிருடன் எழுப்பப்படுவர் . அப்பொழுது நியாயந்தீர்ப்பு இருக்கும் . நித்திய பேரின்பத்திற்கு அல்லது மீள நரகத்திற்கு அனுப்பப்படுவர்.

**கிறித்துவ நாவல்கள்**

நாவல்களில் கிறித்துவ நாவல், இசுலாம் நாவல், இந்து நாவல் என்று பிரிப்பது முறையானது அல்ல என்றாலும் உள்ளடக்கத்தை வைத்து அதனை வகைப்படுத்துதல் என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது . இதனையே இந்நாவலாசிரியரும் சுட்டுவதை **அழியாச்சுடர்** வலைப்பதிவிலிருந்து இங்கு தருவது பொருத்தமானதாகும்

தன்னுடைய நாவலில் மதப்பிரச்சாரம் இல்லை என்பவர் -நான் நாவலை நாவலாகப் பார்த்தேனே தவிர எந்த இடத்திலேயும் மதப்பிரச்சாரம் செய்யலை . நான் வாழ்ந்த எனக்குத் தெரிந்த நாடார் கிறித்தவ குடும்பத்தைப்பற்றிச் சொல்லும்போது அவர்களின் மத இயல்புகளைத்தான் நாவலில் சொன்னேனே தவிர எந்த வகையிலும் நான் நாவலில் மதப்பிரச்சாரம் மேற்கொள்ளவில்லை . ஆனால் நான் பைபிள் பத்தி பிரச்சாரம் நிறைய செய்திருக்கிறேன் ஆனால் நாவலை அதுக்குப் பயன்படுத்தவில்லை என்பார்.

கிறித்தவர்களால் கிறித்தவப் பின்னணியுடன் கிறித்தவக் கதை மாந்தர்களைக் கொண்டு கிறித்தவக் கோட்பாடுகளை உள்ளடக்கிப் படைப்படும் நாவல்களைக்கிறித்தவ நாவல்' என்று வரையறை செய்யப்படுகிறது . கிறித்தவரல்லாதவராலும் முழுக்க முழுக்கக் கிறித்தவப் பின்னணியோடு கிறித்தவக் கதை மாந்தர்களைக் கொண்டு

படைக்கப்படும் நாவல்களையும் கிறித்துவ நாவல்களாக ஏற்கலாம். சான்றாக கா.நா.சு. அவர்கள் எழுதிய 'தாமஸ் வந்தார்' நாவலைச் சுட்டுவர்.

### கிறித்துவ நாவலின் வகைகள்

நாவல் இலக்கியத்தில் ஒருவகையாகக் காணப்படும் கிறித்துவ நாவல்களிலும் அவற்றின் கதைக்கரு அடிப்படையில் ஆறு வகையாகப் பிரிக்கின்றனர்.அவை, 1.சிறுவர் நாவல்கள், 2.குடும்ப நாவல்கள் , 3. சமூக நாவல்கள் , 4.பெண்ணிய நாவல்கள் , 5.பொதுவுடைமை நாவல்கள், 6.வரலாற்று நாவல்கள் என்பனவாம்.

இவை சமகாலச் சமுதாயச் சிக்கல்களை மையமிட்டு எழுதப்பட்டவை . வர்க்க-சாதிய-பாலியல் ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தைக் காண , கிறித்துவப் படைப்பாளர்கள் முற்பட்டனர் . கிறித்துவச் சமுதாயத்தில் காணப்படும் குறைபாடுகளையும் இப்படைப்பாளர்கள் சுட்டத் தவறவில்லை. கிறித்துவ போதனைக் கூறுகளும் இவற்றில் இடம்பெறும்.

மன்னிப்பு, இரக்கம், எளிமை, அன்பு முதலிய தனி மனித அறங்களை வற்புறுத்தும்படியாக அமையும். எனினும் இவை திட்டமிட்டு அல்லாமல் நாவலின் போக்கில் வரும்படியாக அமைந்திருப்பதில் நாவல் அழகியலையும் பெறுகின்றன . இதனோடு பெண் மேம்பாடு, வர்க்கப் போராட்டம், சாதிய ஏற்றத்தாழ்வு, தலைமுறை மாற்றம் ஆகியன கிறித்துவ நாவல்களில் சிறப்பாக எடுத்துரைக்கப்படுகின்றன.

### கிறித்துவ நாவலாசிரியர்கள்

கிறித்தவ நாவல் படைப்பாளர்களாக வேத நாயகம் பிள்ளை, அருமை நாயகம், ஜெகசிற்பியன், டி.செல்வராஜ், ஹெப்சிபா ஜேசுதாசன், டேனியல் டேவிட் சித்தையா , ஆர்.எஸ்.ஜேக்கப், ஐசக் அருமைராஜன் , பி.ஏ.தாஸ், கார்த்திகா ராஜ்குமார் , மோசஸ் பொன்னையா, தமிழவன், பாமா, விடிவெள்ளி போன்றோர் குறிப்பிடப்படுகின்றனர்.

தமிழின் முதல் நாவலான மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரத்தில் இரண்டு லட்சியப் பெண்கள் படைக்கப்பட்டுள்ளனர் . இதில் ஞானாம்பாள் கல்வியும் அழகும் பெற்றவள் . காடு சென்ற கணவன் விபத்தில் சிக்குகிறான். ஞானாம்பாள் அவனைத் தேடிச் செல்கிறாள் . ஆண் வேடம் போட்டுக்கொண்டு ஓர் ஊரை அடைகிறாள் . எதிர்பாராத விதமாக அவளுக்கு அரசு

பொறுப்பு கிடைக்கிறது. ஆண் வேடத்தில் ஆட்சி நடத்துகிறாள். குற்றவாளியாக தன் முன் நிறுத்தப்படும் தன் கணவனைக் காப்பாற்றுகிறாள் . நாட்டில் பல நல்ல சீர்திருத்தங்களைச் செய்கிறாள் . பின்னர் உண்மையை எடுத்துக்கூறி மகுடமும் சூடுகிறாள்.

வேத நாயகம் பிள்ளையின் இன்னொரு நாவலான **சுகுண சுந்தரி**யில் தலைவி நாடு கடத்தப்படுகிறாள். அவள் கன்னி மாடம் ஒன்றில் அடைக்கலம் புகுகிறாள்.அங்குப் பெண் கல்விக்கு ஆதரவாகப் பேசுகிறாள் . வரதட்சிணை, குழந்தைத் திருமணம் , கைம்மை போன்றவற்றை எதிர்த்துப் பேசுகிறாள்.

ஐசக் அருமைராஜனின் '**கல்லறைகள்**' நாவலானது, பணக்கார வர்க்கத்தினரின் வெறியாட்டம், அதற்குத் துணைபோகும் காவல்துறை , ஏழைகள் படும் துன்பம் முதலியவற்றைக் குமரி மாவட்ட வட்டாரத் தன்மையோடு சித்திரிக்கிறது. '**கீறல்கள்**' நாவலானது, சமூகக் கீறல்களைக் கொத்திச் சீர்படுத்த முடியாது.இடித்துவிட்டுப் புதிதாக மாற்ற வேண்டும் என்ற கருத்தை வற்புறுத்துகிறது.

டேவிட் சித்தையாவின் '**கல்லறைப் பூக்கள்**' நாவலானது, இந்திய சமூகத்தில் காணப்படும் சாதிய ஏற்றத்தாழ்வுச் சிக்கலைப் பேசுகிறது . வெவ்வேறு சமயங்களைச் சேர்ந்தவர்கள் ஒருவரை ஒருவர் காதலிப்பதால் ஏற்படும் சிக்கல் ஒரு வகை , கிறித்தவர்களிடையே சாதி வேறுபாடு காரணமாகக் காதலில் சிக்கல் என்ற வகைமைகள் பேசப்படுகிறது. இதுவே இந்நாவலின் களம்.

**புத்தம் வீடு**

ஹெப்சிபா ஜேசுதாசன் நாவலான புத்தம் வீடு , பனைவிளை கிராமத்தில் ஓடு போட்ட வீடு கண்ணப்பச்சியின் புத்தம் வீடு ஒன்றுதான் . புத்தம்வீடு நொடித்துப் போனபோதும் மாதா கோயிலில் மரியாதை குறையாத நிலையையும் மாறிவரும் சமூக மாற்றங்களுக்கு ஏற்ப திருந்துவதையும் குடும்பத்தின் உள்ளே நடைபெறும் குளறுபடிகளையும் பேசுவதாக அமைந்துள்ளது.

**நாவலின் உண்மைத் தன்மை**

புத்தம் வீடு நாவலின் உண்மைத் தன்மை பற்றி ஹெப்சிபாவிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கும் அதற்கு அவரின் பதிலும் பதிவாகியதைக் கீழ்க்கண்டவாறு தரலாம்

"**தீராநதி**: புத்தம் வீடு நாவலை உண்மைச் சம்பவத்தை அடிபடையாக வைச்சா எழுதுனீங்க..? இன்னிக்கு வட்டார வழக்கில் நிறைய நாவல்கள் வருது ...ஆனா அந்த காலகட்டத்துல நாடார் சமுதாய மக்களின் வாழ்க்கையை படைப்பிலக்கியத்தில் நீங்கதான் முதல்முதலா பதிவு செய்ததா சொல்லுறாங்க...

**ஹெப்சிபா**: உண்மைச் சம்பவமான்னு கேட்டா என்ன பதில் சொல்லுறது ஆனால் அந்த நாவல் கையாண்டிருக்கிற நிறைய கதாபாத்திரங்கள் , கதைக்களங்கள் எல்லாமே உண்மைதான். அன்னிக்கு எங்க வீட்டை புத்தம் வீடுன்னுதான் சொல்வாங்க அதுமாதிரி அந்தக் கதையில வர கண்ணப்பச்சிக்கு தாத்தா பேரும் என்னோட தாத்தா பேருதான் . புத்தம் வீடுக்கு முன்னாடி நாடார் சமுதாய வாழ்க்கைமுறை தமிழ்ல நாவல்வடிவமா வரலைன்னு நினைக்கிறேன். அதை அவுங்க (பேராசிரியர் ஜேசுதாசன்) ஒரு பெரிய குறையா சொன்னாங்க அப்பெல்லாம் பிராமண வாழ்க்கைமுறைதான் அதிகமா தமிழ்ல வந்திருக்கு. **நாட்டுல பிராமணன் மட்டும்தான் இருக்காங்களா? அவங்க வாழ்க்கை மட்டும்தான் வாழ்க்கையா ? நம்ம வாழ்க்கை வாழ்க்கை இல்லையா** ?ன்னு ஒரு தடவை சொன்னாங்க. அவங்க சொன்னதெள யோசிச்சுப் பார்த்தப்பத்தான் நா வாழுற சமுதாயத்தைப்பத்தி அதே பேச்சி நடையில 'புத்தம் வீட்டை' எழுத முடுஞ்சுது. அந்த நாவல்ல நாடார் சமுதாய வாழ்க்கை முறையை ஓரளவுக்கு நல்ல படியா பதிவு செய்திருக்கிறேன். என்ற நம்பிக்கை எனக்கு உண்டு . அதுல வர்ற பனையேறி அன்பையன் குடும்பம் மாதிரி நிறயப் பேரை எங்க ஊருல சந்திச்சிருக்கேன்"[1]

## புத்தம் வீட்டில் கிறித்தவ அடையாளங்கள்

பனைவிளை கிராமத்தில் கிறித்துவக் குடும்பத்தில் முதன்மையானதாக கண்ணப்பச்சிக் குடும்பம் காட்டப்படுகிறது . நாவாலாசிரியரும் கிறித்தவர் என்பதால் நாவலின் தொடக்கமே மரத்திற்குக் குறியீடாக **"கோலியாத்"**[2], என்னும் சொல் சுட்டப்படுகிறது. கோலியாத் திருவிவிலியத்தில் குறிப்பிடப்படும் மிகவும் உயரமான மனிதன் ஆவார்.

## உபதேசியார்

அன்றைய காலகட்டத்தில் கிறித்துவக் குடும்பங்கள் நிறைந்த கிராமங்களில் அனைத்துவிதமான கிராம நிர்வாகத்தை நடத்துவதற்கு உபதேசியாருக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கும். அவரே கிராமத்தின் எந்த நிகழ்விற்கும் முன்னிலை வகிப்பார் .

பனைவிளை கிராமம் கிறித்துவ கிராமம். **"மேரியின் தந்தை மோசஸ் என்பவர்தான் உபதேசியார். பழைய மரபுப்படி வீடுகளைச் சந்தித்துச் சபையாருடன் தொடர்பும் வைத்துக்கொண்டு இருந்தார்."**[3]

உபதேசியார் கிறித்தவத்தில் மதிப்புமிக்கவர் . ஆலயத்தின் முன்னிலையாக கிராமத்தின் முன்னியாக இருக்கக்கூடியவர் . ஊரினில் எந்தவித பிரச்சினையாலும் முடிவு அவரிடமே எட்டப்படும் . ஆனால் இந்த உரிமைகளைத் தனிப்பட்ட உபதேசியார்கள் எப்படி பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பதும் தனிப்பட்ட அவர்களைப் பொறுத்ததுதான். உபதேசியார் என்ற பெயரில் பனைவிளை கிராமத்திற்கு இப்படிப்பட்ட வித்தியாசமான மனிதர்கள் வந்துபோய் இருக்கிறார்கள்

இங்கு, தங்கராஜும் தன்னுடைய பிரச்சினையை உபதேசியாரிடமே முறையிட நினைக்கும்போது நாவலசிரியர் தற்போதைய உபதேசியார் பற்றிய ஒரு உருவகத்தை தங்கராஜ் எண்ணவோட்டத்தில் தருகிறார்.

**"உபதேசிமார்களும் பலவிதம் . இப்போதைய உபதேசியார் பெரிய படிப்புப் படித்துவிட்டு வந்திருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள் . ஆனால் கோயிலில் அல்லாமல் அவரை வேறேங்கும் காண்பது அருமை . சபையாருக்கும் அவருக்கும் எந்த விதமான தொடர்பும் கிடையாது . கடைசியாக மாறிப்போனவரானால் , நிலமை முற்றிலும் வேறாக இருந்திருக்கும் . அவர் உபகாரி ; தைரியசாலி; அன்புள்ளவர்; தெய்வபக்தி நிறைந்தவர். அவரிடம் கூசாமல், ஆலோசனை கேட்கச் செல்லலாம். ஆனால் 'சபை'யின் கெட்டகாலம் அவரை ஓராண்டு முடிவதற்குள்ளேயே பிரிவுபசாரம் கொடுத்து அனுப்ப வேண்டியதாகிவிட்டது . இப்போதிருப்பவரை அணுகுவதற்குப் பிடிக்கவில்லை. ஆனால் வேறுவழியில்லை. அணுகியே ஆகவேண்டும்"**[4].

இத்தகு காட்சி தங்கராஜ் லிஸியை பெண்கேட்க நினைக்கும்போது உருவாகிறது மேலும் கண்ணப்பச்சியின் வீட்டின் ஒவ்வொரு சுகதுக்கங்களிலும் பிரச்சினைகளிலும் உபதேசியாரின் பங்கும் இருக்கிறது.

**டீக்கனார்**

'டீக்கன்' என்பது ஆலயத்தில் உபதேசியாருக்கு உதவியாக இருப்பவர் . இத்தகு

டீக்கன் பொறுப்பானது கண்ணப்பச்சிக்கும் கிடைத்திருக்கிறது . இப்பதவி கௌரவமும் பொருளாதார வசதியுமிக்க குடும்பத்திற்கே போய்ச்சேரும் . அத்தகு நல்லநிலையில் இருந்தபோது கண்ணப்பச்சிக்கு இப்பொறுப்பு வாய்த்திருந்தாலும் தற்போதுவரை அது தொடர்கிறது என்றால் வெளியே அக்குடும்பம் நல்ல நிலையில் இருப்பதான தோற்றத்தை விட்டுத்தராதது எனலாம்.

இதனால் கண்ணப்பச்சியும் டீக்கன் பதவியின் கௌரவத்தை விட்டுத்தராமல் அதற்கு பொருத்தமானவராகவே நடந்துகொண்டார் . அந்த மதிப்பு மிக்க பதவியில் ஆலயத்தில் பாடலைப் பாடத் தொடங்குவது , ஜெபங்களை உரைப்பது , ஜெபக்குடும்பங்களுக்கு ஆனதைச் செய்வதில் அக்கறை எடுத்துகொள்வது என அடங்கும்.

**திருவிவிலியம் வாசித்தல்**

கிறித்துவர்களிடம் தினமும் திருவிவிலியம் வாசிக்கும் பழக்கமானது இருக்கும் அதுபோல 'புத்தம் வீடு நாவலிலும் காட்டப்பட்டுள்ளது லிஸி தினமும் கண்ணப்பச்சிக்கு விவிலியம் வாசித்துச் சொல்லுவாள். **"கண்ணப்பச்சிக்குத் தனிமைத் துயர் அதிகம் . லிஸியின் துணையை இன்னும் கூடுதலாக நாடினார். கண்ணப்பச்சிக்கு நினைத்த நேரம் பைபிளும் தினப்பத்திரிகையும் வாசித்துக் கொடுக்க வேறு யார் இருக்கிறார்கள்?"**[5] என்ற காட்சி விவிலியம் வாசிக்கும் பழக்கத்தை உணர்த்துகிறது

**ஆலயம்**

ஆலயத்தில் எப்போதும் ஆராதனைகளும் ஜெபங்களும் நடப்பதுண்டு . முக்கியமாக வாரத்தில் முதல் நாள் ஞாயிறு அன்று ஆராதனைகளும் ஜெபங்களும் நடக்கும். அதுபோல 'புத்தம் வீடு ' நாவலிலும் குடும்பத்தில் உள்ளவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆலயம் செல்கிறார்கள் . இங்கே ஜெபங்களை முதலில் கூறக்கூடியவராகக் கண்ணப்பச்சி இருக்கிறார்.

ஞாயிறு ஜெப கூட்டத்தில் காணிக்கைகள் கொடுக்கப்படுவதும் புத்தம் வீட்டில் பதிவாகியுள்ளது. மக்கள் தங்களால் இயன்ற பொருட்களை ஆலயத்தில் காணிக்கையாகக் கொடுக்கின்றனர் . **"கோயிலில் ஏராளம் கருப்புக்கட்டி காணிக்கையாக வரும் . அப்போது அதை 'லேல'த்தில் பிடிப்பதற்கென்று**

**ஏராளம்பேர் கோயிலுக்கு வந்துவிடுவார்கள்"**[6].

பனைவிளை கிராமத்தைப் பொறுத்தவரை காணிக்கை என்பதுகருப்புக்கட்டி'யாக இருக்கிறது. இந்த காணிகையானது தங்களது கிராமத்தில் உழைப்புக்குக் கூலியாகக் கிடைத்ததை மக்கள் காணிக்கையளிக்கின்றனர். இந்த காணிக்கையின் மொத்தமானது இறுதியில் ஏலத்தில் விடப்பட்டு பணமாக மாற்றிக்கொள்ளப்படும் என்பதையும் நாவல் சுட்டிச் செல்கிறது.

**பனைவிளை கிராமத்தினரின் பக்தி**

பொதுவாக கிறித்தவர்கள் இயேசு கிறி த்துவைப் பற்றியும் , கிறித்துவ சமய வழிபாடு மற்றும் கிறித்துவ அதன் தன்மைகளையும் நெறிமுறைகளையும் அறிந்திருப்பர். ஆனால் பனைவிளை கிராமத்தினைப் பொறுத்தவரை கிராமத்தினர் கிறித்தவராக இருந்தாலும் கிறித்துவத்தைப் பற்றிய முழுமையை அறிந்தவராக இல்லை என்பதை நாவல் சுட்டுகிறது.

**"பனைவிளைக் கிராமத்தில் பக்திப் பிரவாகம் எடுத்து ஓடவில்லைகிறித்தவ ஆலயத்துக்குப் போகிறவர்களில் பெரும்பாலானவர்களுக்குக் கிறிஸ்மஸ் கர்த்தர் பிறப்புப் பண்டிகை என்றும் , துக்க(பெரிய) வெள்ளிக் கிழமையென்றும் அவரைச் சிலுவையில் அறைந்தார்கள் என்றும் தெரியுமே தவிர, ஏசுநாதரைப் பற்றிய மற்ற விவரங்கள் ஒன்றும் தெரியாது"**[7].

**திருமண அறிவிப்பு**

கிறித்துவ குடும்பங்களில் திருமணம் நிச்சயிக்கப்பட்டால் ஆலயத்தில் மூன்று ஞாயிறுகள் சிறப்பு அறிவிப்புகளாக வெளியிடப்படும் . ஒலிபெருக்கியில் இச்செய்தி வெளியிடப்பட்டு அதற்குத் தடைகள் ஏதும் வைக்கப்பட்டால் அதுபற்றி விசாரிக்கப்படும் அதுபோல புத்தம் வீடு நாவலிலும் லில்லி -தேவமாணிக்கம் இருவரின் திருமண அறிவிப்புச் செய்யப்படுகிறது. கோயிலில் திருமண நாளன்று மணமக்களிடம் சம்மதம் கேட்கப்படுகிறது.

**"கோயிலில் மணமகன் மணமகள் ஆகிய இருவர் சம்மதமும் முறையாக தெரிவிக்கப்பட்டது. வியாழக்கிழமை காலையில் பொன்னுத்தம்பி மகள் லில்லிக்கும் தேவமாணிக்கம் வைத்தியருக்கும் பனைவிளைத் தேவாலயத்தில்**

**திருமணம்."**[8] இவ்விதமாக திருமண அறிவிப்பு அடையாளப்படுகிறது

## முடிவுரை

இவ்வாறு புத்தம் வீடு நாவலானது தனது கிறித்துவ அடையாளத்தை போதனையாக அல்லாமல் புனைவின் தன்மையோடு மிக எதார்த்தமாக முன்வைக்கிறது.

## குறிப்புகள்

[1] அழியாச்சுடர், வலைத்தளப் பக்கம்.
[2] ஹெப்சிபா ஜேசுதாசன், புத்தம் வீடு,ப.14.
[3] ஹெப்சிபா ஜேசுதாசன், மு,நூ,ப.31.
[4] மேலது,ப.92.
[5] மேலது,ப.36.
[6] மேலது,ப.43.
[7] மேலது,ப.45.
[8] மேலது,ப.118.
[9] **முதன்மை நூல்; ஹெப்சிபாஜேசுதாசன், புத்தம்வீடு, காலச்சுவடுபதிப்பகம், நாகர்கோவில், மு.ப.2009.**